# அரசியலுக்கு சாதகமான நிலையை எதிர்பார்த்து இனப்பிரச்னைக்கு தீர்வுகாண முடியாது! - சிறிமாவோ

(கொழும்பு)
இனவாதம், அரசியல் ஆகியவற்றுக்கு ஒரு சாதகமான நிலையை எதிர்பார்த்து இனப் பிரச்னைக்குத் தீர்வு காண முடியாது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி (4-ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 5-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 34 திருவள்ளுவர் ஆண்டு 2023 ஆடி 17 இதழ் 172
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 1 — 08 — 1992

## க. பொ. த. (உ/த) பரீட்சை 1,60,000 பரீட்சார்த்திகள் பரீட்சைக்கு தோற்றுகிறார்கள்

(கொழும்பு)
இன்று ஆரம்பமாகும் க. பொ. த. (உ/த) பரீட்சைக்கு நாடு முழுவதிலுமிருந்து ஒரு லட்சத்து 60 ஆயிரம் பரீட்சாத்திகள் தோற்றுகின்றனர். யாழ். மாவட்டத்தில் (4-ம் பக்கம் பார்க்க)

## ஐ. நா. இந்த வருடத்துடன் மூடப்படும்?

(வாஷிங்டன்)
ஐரோப்பிய நாடுகள் சபையை நிர்வகிக்க அதில் அங்கம் வகிக்கும் நாடுகள் [illegible] வழங்கத் தவறினால் ஐ. நா. சபைக் கட்டடத்தை டிசம்பர் மாதம் 31-ந் திகதியின்பின்பு மூடிவிடவேண்டிய நிலை ஏற் (4-ம் பக்கம் பார்க்க)

புலிகளின் அதிரடிகளைசமாளிக்க இயலாது

# கிழக்கில் காவலரண்களை விட்டு ராணுவம்பின்வாங்கிச்சென்றது

(கொழும்பு)
கிழக்கு மாகாணத்தில் விடுதலைப்புலிகள் அண்மைக்காலமாக மேற்கொண்ட திடீர் அதிரடித் தாக்குதல்களினால் நிலைகுலைந்துபோன ஸ்ரீலங்கா இராணுவத்தினர் பல காவலரண்களைக் கைவிட்டு, பாதுகாப்பான இடங்களை நோக்கிப் பின்வாங்கிச் சென்றுள்ளனர்.

புலிகளின் கடுமையான தாக்குதல்களை எதிர்கொள்ள இராணுவத்திற்கு முடியாது இருப்பதாகவும் ஏற்பட்டு வரும் பலத்த இழப்புக்களை தவிர்க்கும் விதமாகவுமே படையினர் இவ்விதம் பின்வாங்கிச் சென்றிருப்பதாகக் (4ம் பக்கம் பார்க்க)

## தந்திரிமலை விகாராதிபதி கொலை: 3 சந்தேக நபர்கள் நேற்று மாஜிஸ்திரேட் முன் ஆஜர்

(கொழும்பு)
தந்திரிமலை பௌத்த விகாரை பிரதம குரு கொலை சம்பந்தமாக அதே விகாரையைச் சேர்ந்த பௌத்தபிக்கு ஒருவரும், வேறு இருவரும் நேற்று இரகசியப் பொலிசாரினால் கைது செய்யப்பட்டனர்.

கைதுசெய்யப்பட்ட மூவரும் நேற்று அநுராதபுரம் மாஜிஸ் (4ம் பக்கம் பார்க்க)

## நல்லூர் உற்சவகாலத்தில் பெண்கள் அளவோடு நகை அணிய வேண்டும்

- காவல்துறை வேண்டுகோள்.

(யாழ்ப்பாணம்)
நல்லூர்ஆலய உற்சவகாலங்களில் பெண்கள் தேவைக்கு அதிகமான தங்க நகைகளை அணிந்து வருவதை தவிர்த்துக் கொள்ளும்படி தமிழீழ காவற்துறையினர் பொதுமக்களுக்கு வேண்டுகோள்விடுத்துள்ளனர்.

இம்மாதம் 3ம் திகதியிலிருந்து 29ம் திகதிவரை பருத்தித்துறை வீதி, யாழ். மாநகர சபை அலுவலகம் முன்பாக இருந்து அரசடிச் சந்திவரையும் கோவில்வீதி சங்கிலியன் வீதியிலிருந்து, செட்டியொழுங்கை சந்திவரையிலும் செட்டிவீதி செட்டி ஒழுங்கை சந்திலிருந்து பருத்தித்துறை வீதி வரையிலும் வாகனப் (4-ம் பக்கம் பார்க்க)

## பத்து வருட யுத்தத்தில் 20ஆயிரம் படையினர் பலி!

(லண்டன்)
இலங்கையின் வடக்கு-கிழக்குப் பகுதியில் நடைபெற்று வரும் யுத்தத்தில் கடந்த 10 வருடத்தில் மட்டும் சுமார் இருபதாயிரம் படையினர் கொல்லப்பட்டதாக பி. பி. சி. தெரிவித்தது.

மேலும் கடந்த 5 ஆண்டுகளில் மட்டும் 4 ஆயிரம் படையினர் இராணுவத்தை விட்டுத் தப்பி ஓடிவிட்டதாகவும், இவர்களுக்கு மன்னிப்பு வழங்கி மீண்டும் படையில் [4ம் பக்கம் பார்க்க]

## போரில் காயமடையும் பொலிஸாருக்கு விசேடபடி

(கொழும்பு)
போரில் காயமடையும் பொலிஸாருக்கு விசேட படி வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகிறது.

போரில் காயமடையும் பொலிசாருக்கு அவர்கள் சிகிச்சைபெறும் காலத்திலும் போர்க்கால விசேடபடி வழங்கப்படவேண்டும் என்று அமைச்சரவை தீர்மானித்துள் [4-ம் பக்கம் பார்க்க]

## முஸ்லிம் ராணுவப்பிரிவு அமைப்பது சாத்தியமில்லை

(கொழும்பு)
முஸ்லிம்களுக்கென தனியான இராணுவப் படைப் பிரிவு ஒன்றினை அமைப்பது சாத்தியமல்ல என்று ஜனாதிபதியின் சர்வதேச விவகாரங்களுக்கான ஆலோசகர் பிரட்மன வீரக்கோனும் இராணுவப் பேச்சாளர் கேர்ணல் சரத் முனசிங்காவும் தெரிவித்துள்ளனர்.

இராணுவம் முழுமையாக சிறிலங்கா இராணுவமாக இருக்கவேண்டும். தமிழ், முஸ்லிம, சிங்கள இராணுவம் என்று தனித்தனி பிரிவாக இராணுவம் ஒருபோதும் இருக்கக்கூடாது என்றும் அவர் (4ம் பக்கம் பார்க்க)

## ருகமையில் கைதான தமிழ் மாணவர்களை விடுவிக்குமாறு கோரிக்கை

(யாழ்ப்பாணம்)
வட இலங்கை மருத்துவக் கல்லூரியைச் சேர்ந்த நான்கு தமிழ் மாணவர்கள் ருகமையில் 2-வது எம். பி. பி. எஸ். பரீட்சையை எடுத்துவிட்டு திரும்புகையில் பொலிசாரால் கைது செய்யப்பட்டது தொடர்பாக ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மாணவர்களை உட (4ம் பக்கம் பார்க்க)

## யாழ். செஞ்சிலுவைச்சங்க கிளைக்கு இடைக்கால நிர்வாக சபை அமைக்க கோரிக்கை

(யாழ்ப்பாணம்)
இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் யாழ் கிளை தலைமையகத்திற்கு இடைக்கால நிர்வாகசபைக்குழு அமைக்குமாறு கொழும்பு செஞ்சிலுவைச் சங்க தலைமையகம் யாழ். அரச அதிபரை கேட்டுள்ளது. வெகுவிரைவில் ஐந்துபேரை கொண்ட குழுவை யாழ். அரச அதிபர் நியமிக்கவிருக் (4ம் பக்கம் பார்க்க)

## இந்தியாவிலுள்ள இலங்கை தூதரகத்தை மூடுமாறு பாட்டாளி மக்கள் கட்சி கோரிக்கை

(சென்னை)
இலங்கை தமிழர்களை ஸ்ரீலங்கா இராணுவம் கொன்று குவிப்பதால் இந்தியாவிலுள்ள இலங்கை தூதரகத்தை உடனடியாக மூட வேண்டுமென்ற கோரிக்கையை முன்வைத்து பாட்டாளி மக்கள் கட்சி மாபெரும் ஊர்வலம் ஒன்றை அண்மையில் தமிழகத்தில் நடாத்தியது.

பாட்டாளி மக்கள் கட்சி உட்பட 22 அமைப்புகள் கலந்து கொண்ட இவ் ஊர்வலத்தில் பின்வரும் கோரிக்கைகளும் வலியுறுத்தப்பட்டன.

இலங்கை மீது பொருளாதாரத் தடை விதிக்கப்பட வேண்டும், தமிழீழ விடுதலையை அங்கீகரிக்க வேண்டும். விடுதலைப்புலிகள் மீதான (4ம் பக்கம் பார்க்க)

பெய்யும் மழை நீர் பெயராதிருந்தால்
செய்யும் தொழிலும் சிறப்படையும்

# வரி விளம்பரம்

### புத்தகம்

''நாமம் சொல்லுவோம்'' (நமனை வெல்லுவோம்) விலை ரூபா: 18/- வெளியீடு: நடுவுத்துருத்தி 388/6, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். தபாற் செலவு இலவசம் (சி-6590)

### சோபிதா

பாடசாலை உபகரணங்கள், அலுவலக உபகரணங்கள், மொத்தமாகவும், சில்லறையாகவும் மலிவுவிலையில் பெற்றுக்கொள்ளலாம், 'சோபிதா' 863, கே. கே. எஸ். றோட், யாழ்ப்பாணம். (ஏ-2207)

### வியாழ மாற்றம்

மண்ணில் நிலைபெற்ற ஜோஸ்யரின் வியாழ மாற்ற பலன்கள் வெளிவந்துள்ளன. திருமணம் பற்றிய (திடுக்கிடும்) செய்தியும் இணைக்கப்பட்டுள்ளது. எங்கும் விற்பனையாகின்றது. விலை 6-75. பன்னிரு ராசிகளும் ஒரே புத்தகம் (சி-6612)

### பரீட்சை (ஆண்டு-4)

ஆண்டு 4 மாதிரிப் பரீட்சை (தமிழ் கணிதம், ஆங்கிலம்) 01-08-92 சனி மு. ப. 8-00 11-00 நடைபெறும். பதிவு செய்யவும். மாதிரி வகுப்புகள் ஆரம்பமாகியுள்ளன. புதிய கல்வி நிலையம், 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (சி-6610)

### வாங்கலாம் விற்கலாம்

நல்ல நிலையிலுள்ள மணிக்கூடுகள், றேடியோக்கள் வாங்கப்படும், விற்கப்படும். உதிரிப்பாகங்களுக்கான மணிக்கூடுகளும், றேடியோக்களும் வாங்கப்படும். மணிக்கூடுகள், றேடியோக்கள் உத்தரவாதத்துடன் திருத்திக் கொடுக்கப்படும் டிலகா வாச் வேக்ஸ், 284, ஸ்ரான்லிவீதி (வானவில் கூல்பார் அருகாமை), யாழ்ப்பாணம். (சி-6600)

### சோதிடம்

கல்வி, விவாகம், தொழில் தடைகள் தீரவும், குடும்பப் பிரச்சனை, நோய், தீராத கஷ்டம், வறுமை நீங்கவும், அதிர்ஷ்டம் அழைக்கிறது. சாதகத்துடன் நேரில் வரவும். பலன் தவறினால் பணம் திரும்பப்பெறலாம். ஸ்ரீசக்தி கணேஷ் உபாசகர், ஸ்ரீமாவை விநாயகர் சோதிட நிலையம், 96, கோவில் வீதி, (ஸ்ரீ கைலாசப்பிள்ளையார்கோவில் சந்தி), நல்லூர். [சி 6589]

### வைத்தியம்

செங்கண்மாரி, குடற்புண், தொய்வு, வாதரோகங்கள், வலிப்புநோய், பீனிசம், தலையிடி, தலைகால் அவியல், சருமநோய்கள், மாதவிடாய்க் குத்து, இரத்தப்போக்கு, வெள்ளைக்கசிவு, மூலவியாதிகள், மூத்திர ரோகங்களில் பிரடலமானவர் சகல வியாதிகளையும் குணப்படுத்துவார். வேலணைவைத்தியர் சி இராசரத்தினம், 121, 2-ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். (சி-6561)

### ஈழத்து நூல்கள் விற்பனை

நல்லூர் கந்தசுவாமி கோவில் உற்சவகாலங்களில் எமது நிறுவனத்தால் ஈழத்து நூல் கண்காட்சியும், விற்பனையும் ஒழுங்குசெய்யப்பட்டுள்ளன. வெளியீட்டாளர்கள், பதிப்பாளர்கள் எம்முடன் தொடர்பு கொள்ளவும். ஸ்ரீகாந்த், புத்தகசாலை, நல்லூர் கந்தசுவாமி கோவிலடி, நல்லூர். (எ-2334)

## வியாபாரம்பெருக விளம்பரம் செய்க

### நோவு வைத்தியம்

ஒட்டகப்புலம் சமத்தர் நோவு எண்ணை கிடைக்குமிடம். எஸ். ரி. மெடிக்கல்ஸ், 490, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (சி-6448)

## 60 குடும்பங்களுக்கு பதிவுத் திருமணம்

(உடுவில்)

தாவடி தெற்கு ஸ்ரீகாளி அம்பாள் சனசமூகநிலையத்தில் இன்று முதலாம் திகதி, 60 குடும்பங்களுக்கான இலவசப் பதிவுத் திருமணம் நடைபெறுகிறது. இக்குடும்பங்களுக்கான திருமணப் பதிவுகளைப் பதிவாளர் திரு. செ. அன்னலிங்கம் நடத்திவைப்பார். (109)

## மண்ணெண்ணை விநியோகம்

(பண்டத்தரிப்பு)

யாழ் சுகாதார திணைக்கள ஊழியர்களுக்கும் மற்றும் அரசாங்க வைத்தியசாலைகளில் கடமையாற்றும் ஊழியர்களுக்கும் தலா இரண்டு லீற்றர் மண்ணெண்ணை லீற்றர் 15 ரூபா வீதம் வழங்கப்படவுள்ளது. இதற்கான ஏற்பாடுகளை யாழ். பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளர் செய்துள்ளார். (72)

# ஒலிம்பிக் நீச்சல் போட்டிகளில்

## 5 உலக சாதனைகள் முறியடிப்பு

[பார்ஸிலோனா]

பார்ஸிலோனாவில் நடைபெறும் ஒலிம்பிக் போட்டியில் 6-வது நாளான நேற்று முன்தினம் நீச்சல் போட்டிகளில் ஐந்து உலக ஒலிம்பிக்சாதனைகள் முறியடிக்கப்பட்டன.

இருநூறு மீற்றர் கனிநபர் நீச்சல் போட்டியில் சீனாவைச் சேர்ந்த லில்லி புதிய சாதனை படைத்துள்ளார்

அமெரிக்கமகளிர் குழுவினர் 400 மீற்றர் அஞ்சல் நீச்சல் போட்டியில் ஒலிம்பிக் சாதனையை முறியடித்துள்ளனர். ஆடவருக்கான 200 மீற்றர் போட்டியிலும் இன்னொரு ஒலிம்பிக்சாதனை நேற்று முன்தினம் நிகழ்த்தப்பட்டது.

ஆடவருக்கான 100 மீற்றர் மல்லாந்து நீச்சலடிக்கும் போட்டியில்கனடாநாட்டைச் சேர்ந்த மார்க்ஸ் ரியுக்ஸ் ரி புதிய ஒலிம்பிக்சாதனை நிகழ்த்தி தங்கப்பதக்கத்தைப் பெற்றுள்ளார் சோவியத்இணைந்த குழுவைச் சேர்ந்த அலெக்சாண்டர் பப்பா 50 மீற்றர் சுயேச்சைப்பாணி நீச்சல் போட்டியில் தங்கப்பதக்கத்தைதட்டிக் கொண்டார்.

இதேவேளை உடல்வலுவைப் பெருக்கிக் கொள்வதற்கான ஊட்ட மருந்தை விளையாட்டு வீரர்கள் உட்கொண்ட விவகாரம் தொடர்பாக இந்த ஒரு விளையாட்டு விழாவிலிருந்து மூன்று பிரிட்டிஸ் வீரர்கள் வெளியேற்றப்பட்டு தாயகத்திற்கு திருப்பி அனுப்பப்பட்டுவிட்டனர். [ரி]

## சான்றிதழ் வழங்கல்

(யாழ்ப்பாணம்)

தீவுப்பகுதியிலிருந்து இடம்பெயர்ந்து தற்பொழுது யாழ். நகரில் கல்வி பயிலும் மாணவர்களுக்காக விஷேடமாக நடாத்தப்பெற்ற முதலுதவி வகுப்புகளில் கலந்துகொண்டு பின்னர் பரீட்சைக்கு தோற்றி சித்தியடைந்த மாணவர்கட்கான முதலுதவி சான்றிதழ்கள், லங்கா ஆயுர்வேத கல்லூரி மண்டபத்தில் நாளை 2ம் திகதி தீவுப்பகுதி அத்தியட்சகர் தலைமையில் நடைபெறவுள்ள வைபவத்தில் வழங்கப்படவுள்ளது.

விழாவிற்கு மாகாண ஆணையாளர் ... கலந்து கொள்ளவுள்ளார். சித்தியடைந்தோருக்கான சான்றிதழ்களை திருமதி ஜெயந்த இன்னுசிததப்பி வழங்குவார்


வாடிக்கையாளர்களே!

★ ஷகி சலூன்

லேடீஸ் அன் ஜென்ஸ்

எ. ஜி. டாஸ்

596/2, கே. கே. எஸ். வீதி,

நாச்சிமார் கோவிலடி,

யாழ்ப்பாணம்.

குறிப்பு: மேற்படி ஸ்தாபனம் ஒழுங்கை வீடொன்றில் இயங்குவது குறிப்பிடத்தக்கது.

எமக்கு வேறு கிளை ஸ்தாபனம் இல்லை (சி 6617)


## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



தாயின் மடியில்

2-6-1970

வீரச்சாவு

1-8-1991

மேஜர் கணேஸ்

(வைத்திலிங்கம் துரைவடிவேல்)

(கரவெட்டி)

திதி: 21-07-1992

தொண்டமனாறு ஈன்றெடுத்த — மாவீரனே
களங்கள் பல கண்டு வெற்றிவாகை சூடினாய்
இலட்சியம் நிறைவேற பாசங்களை திறந்து
உன் உயிரையே தியாகம் செய்தாய்.
ஆனையிறவில் உல்லாசவிடுதியை மீட்டாய்
காயமடைந்த நீ மீண்டும்
தமிழ்மண் மீட்டெடுக்கப் புறப்பட்டாய்
ஆனையிறவினிலே சரித்திரமாகிவிட்டாய்
நீங்குமா உன்நினைவு எம்மைவிட்டு.

கரணவாய் மத்தி, நவிண்டில், கரவெட்டி. — குடும்பத்தினர்

(சி-6604)

## மிருதங்க அரங்கேற்றம்

(யாழ்ப்பாணம்)

தர்மராஜா திருக்குமாரின் மிருதங்க அரங்கேற்றம் இன்று சனிக்கிழமை மாலை நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீனக் கலா மண்டபத்தில் நடைபெறும். இவ்விழாவிற்கு வடக்கு-கிழக்குமாகாணசபை யாழ். மாவட்டப்பிரதிஆணையாளர் து. வைத்திலிங்கம் தலைமை தாங்குவார். பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் கா. மாணிக்கவாசகர், யாழ் பல்கலைக்கழகக் கலைப் பீடாதிபதி பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை, யாழ். பல்கலைக்கழக நுண்கலைப் பீடாதிபதி பேராசிரியர் கா. சிவத்தம்பி ஆகியோர் கலந்துகொள்வர். (எஸ்)

## கரபந்தாட்ட சுற்றுப்போட்டி

(புங்குடுதீவு)

அறவழிப் போராட்டக் குழுவின் ஆதரவுடன் நாவற்குழி லவனிதா குடியேற்றத் திட்ட மாவீரர் நற்பணிமன்ற விளையாட்டுக் குழு நடாத்தும் யாழ். மாவட்ட ரீதியிலான ஆறு பேர் கொண்ட ஒவர் கேம் முறையிலான கரபந்தாட்ட சுற்றுப்போட்டியில் பங்குபற்ற விரும்பும் விளையாட்டுக்கழகங்கள் ஆகஸ்ட் மாதம் 5-ந் திகதிக்கு முன்னர் தமது விண்ணப்பங்களை அனுப்பி பெயர்களைப் பதிவு செய்யுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (101)

## வலைப்பந்தாட்ட நடுவர்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் வலைப்பந்தாட்ட நடுவர்களின் பற்றுக்குறை நிவர்த்தி செய்வதற்காக யாழ். மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழுவினால் வலைப்பந்தாட்ட நடுவர்களுக்கான பயிற்சி முகாம் ஒன்று நடாத்தப்படவுள்ளது.

இதில் கலந்து கொள்ள விரும்புபவர்கள் வலைப் பந்தாட்டம் பற்றிய அடிப்படை அறிவுள்ளவர்களாக இருக்க வேண்டும். பயிற்சி முகாம் கோட்பாடுகள், செயன்முறை என இரு பிரிவுகளாக நடைபெறும். முடிவில் பரீட்சை நடாத்தப்பட்டு தெரிவு செய்யப்பட்டவர்களுக்குச் சான்றிதழ் வழங்கப்படும்.

விண்ணப்பங்கள் அவ்வப் பகுதி விளையாட்டுப் பொறுப்பாளரிடம் அல்லது செயலாளர், யாழ். மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழு, மாவட்ட செயலகம், சோண்டாவில் என்ற முகவரிக்கு இம் மாதம் 10 ம் திகதிக்கு முன்னதாக அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். (வி)

## செஞ்சோலை இசைமாலை

(யாழ்ப்பாணம்)

செஞ்சோலை, இசைமாலை நிகழ்ச்சி 4ம் திகதி பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியிலும் 5ம் திகதி நீர்வேலி அத்தியார் இந்து, 6ம் திகதி சுன்னாகம் ஸ்கந்தா, 7ம் திகதி சுன்னாகம் இராமநாதன் 9ம் திகதி சென் ஜோன்ஸ், 0ம் திகதி நெல்லியடி மத்திய. 11ம் திகதி வல்வெட்டித்துறை அம்மன் கோயில். 12ம் திகதி பருத்தித்துறை பஸ் நிலையம், 15ம் திகதி கொடிகாமம் திருநாவுக்கரசு வித்தியாலயம், 16ம் திகதிசாவகச்சேரி இந்துக் கல்லூரியில் இரவு 8-30 மணிக்கு நடைபெறும்.

## பண்டத்தரிப்பு கொத்தணி முதலாமிடம்

(பண்டத்தரிப்பு)

மேஜர் முரளி நினைவை முன்னிட்டு பண்டத்தரிப்பு கல்விக்கோட்டப் பிரிவு மட்டத்தில் நடைபெற்ற விளையாட்டுப்போட்டியில் பண்டத்தரிப்பு கொத்தணி 75 புள்ளிகளைப் பெற்று முதலாமிடத்தைப் பெற்று வெற்றியீட்டியது.

அளவெட்டி அருணோதயக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் அண்மையில் இப்போட்டி நடைபெற்றது. (72)

## விபத்தில் காயம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் முத்திரைச் சந்திக்கும் சட்டநாதர் சிவன்கோவிலிற்கும் இடையில் [பருத்தித்துறை வீதி] நேற்று முன்தினம் காலைமோட்டார் சைக்கிள் - சைக்கிள் விபத்தில் சிக்கிசைக்கிளில்வந்த சிறுவன் செல்வராஜாசேகா [வயது 12] புன்னாலைக்கட்டுவன் மயக்கமடைந்த நிலையில் யாழ்ப்பாணம்போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். (56-158)

## பதவி உயர்வு

[மானிப்பாய்]

யாழ். செயலகத்தில் மத்திய அரசின் நிர்வாகத்தின் கீழ் பணிபுரியும் அலுவலக ஊழியர்கள் 5 பேருக்கு தரம் இரண்டு பதவி உயர்வு கிடைத்துள்ளது.

இவர்களின் பதவி உயர்வுக்கான கடிதத்தினை யாழ். அரச அதிபர் திரு. மாணிக்கவாசகர் கொழும்பிலிருந்து எடுத்து வந்துள்ளார். (71)

## ஆடிப்பூர விழா

(மானிப்பாய்)

சுதுமலை தெற்கு அருள்மிகு மாரியம்மன் ஆலயத்தில் இன்று சனிக்கிழமை ஆடிப்பூர விழா நடைபெறவுள்ளது

பகல் விசேட அபிஷேக ஆராதனைகள் இடம்பெற்று பின்னர் அம்பாள் வீதி உலா வரும் காட்சி இடம்பெறும். [71]

# "முஸ்லிம்களால் மேற்கொள்ளப்படும் மதமாற்றத்திற்கு எதிராக போர்க்குரல் எழுப்பவேண்டும்"

(யாழ்ப்பாணம்)

"கிழக்கிலங்கையில் முஸ்லிம்களால் மேற்கொள்ளப்படும் வலுக்கட்டாய மதமாற்றத்தை எதிர்த்து உலகில் வாழும் இந்துக்கள் போர்க்குரல் எழுப்பவேண்டும்" இவ்வாறு சுன்னாகம் சுதிரமலைச் சிவன் தேவஸ்தானத்தில் நடைபெற்ற இந்து சமயப் பேரவைக் கருத்தரங்கில் கலந்துகொண்டு உரையாற்றிய இந்து சமயப் பேரவைச் செயலாளர் திரு. சி. சக்திகிரீவன் குறிப்பிட்டார்.

மேற்படி கூட்டம் தேவஸ்தான பிரதம சிவாச்சாரியார் சிவஸ்ரீ நா. சர்வேஸ்வரக் குருக்கள் தலைமையில் நடைபெற்றபோது அவர் மேலும கூறியதாவது: "இந்துமதம் மதவெறியை வெறுக்கிறது. மத அழிப்பை எதிர்க்கிறது. இன்று கிழக்கு மாகாணத்தில் பலநூற்றுக்கணக்கான இந்துக்கள் பலவந்தமாக மதம் மாற்றப்படுவதை கண்மூடிமௌனியாக ஒருபோதும் பார்த்துக் கொண்டிருக்க முடியாது. தர்மத்தைக் காப்பதும், அதர்மத்தை அழிப்பதும் இந்து தர்மத்தின் அடிநாதம் இன்று இந்நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலையைப் பயன்படுத்தி மதமாற்றத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் உடனடியாகத் தங்கள் நடவடிக்கைகளைக் கைவிட வேண்டும். தொடர்ந்து இந்துக்களுக்கு ஏற்படுகின்ற அனர்த்தங்களையும், மதஅழிப்பு நடவடிக்கைகளையும் உலகில் வாழும் இந்துக்கள் இனிமேலும ஒருபோதும் அனுமதிக்கமாட்டார்கள்.

இந்து மதத்தின் தாராளக் கொள்கை இந்து மதத்திற்கு பலவீனமாக அமைந்தால் இன்றைய தொழில் நுட்ப யுகத்தில் அத்தாராளக் கொள்கையை மாற்றிக்கொள்வது இந்துக்களின் தலையாய பொறுப்பாகிவிடும். ஒரு பக்கம் இந்துமத அழிப்பும் இன்னோர் பக்கம் இந்துமத தத்துவ விமர்சனமும் ஏககாலத்தில் நடைபெறுகிறது. இதனைத் தொடர்ந்தும் அனுமதிக்க இந்துக்கள் தயாராகவில்லை. எமது கலை கலாசார ஆத்மீக வாழ்விலிருந்து நாம் ஒருபோதும் மாறததயாராகவில்லை என்பதைக் கடந்தகால வரலாறு தெளிவு படுத்தும் என்றார்.

## பல் வைத்திய பரீட்சையில் 15 தமிழர்கள் சித்தி

(மானிப்பாய்)

இவ்வருடம் ஜனவரியில் நடைபெற்ற பேராதனைப் பல்கலைக்கழக இறுதியாண்டுப் பரீட்சையில் 15 தமிழர்கள் சித்தியடைந்துள்ளனர்.

இவர்களின் பரீட்சைப் பெறுபேறுகள் தற்போது வெளிவந்துள்ளன. பெயர் விபரம் பின்வருமாறு: எஸ். கமலச்சந்திரன், பி. கிருபாகரன், பி. மாலினி, பி. தவச்செல்வி, ரி. யாகசீலி தியாகசீலி, ரி. வித்தியா (ஓர்தோடென்டிஸ்ற் விசேட சித்தி) ஆர். யாமினி (பிரோடென்ரிஸ்) விசேட சித்தி, பி. லோகநாதன், வி. உதயராணி, டி. வாசுதேவன், வி. விஜயகலா, வி. அனுரா, ஏ. தேவிகா, ஜி. கலாரஞ்சினி, வை ரஞ்சி, இத்துடன் மேலும் இருபாடங்களில் யாமினி அதிக புள்ளிகளைப் பெற்றுள்ளார். (71)

# இறுதி மூச்சு இருக்கும் வரை எனது தமிழ்ப்பணி தொடரும்

## சிங்கப்பூர் விழாவில் தொண்டா

(சிங்கப்பூர்)

எனது இறுதி மூச்சு இருக்கும் வரை தமிழினத்திற்கான எனது பணி தொடரும் என்று அமைச்சர் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

சிங்கப்பூரில் தொண்டமானுக்கு அளிக்கப்பட்ட பாராட்டு வைபவம் ஒன்றில உரையாற்றுகையிலே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் அங்கு பேசுகையில் கூறியதாவது: இந்த பயணத்தில் எதிர்ப்படும் எந்த விதமான சவால்களுக்கும் நான் முகம் கொடுக்க தயார். தமிழக மூதறிஞர் குழு என்னை இந்த ஆண்டின் சிறந்த தமிழனாகத் தெரிவு செய்தது. சிங்கப்பூர் தமிழரின்சார்பில் எனக்கு பாராட்டு விழா நடைபெறுகிறது. இவைகள் அனைத்தும் எனது எண்பதாவது வயதில் தமிழினத்திற்கானஎனதுசேவையை வேகத்துடன் செய்ய உற்சாகம் தருகிறது என்றும் அவர் மேலும் கூறினார். (ரி)

# "வாழ்க்கையில் ஏற்படும் பிரச்னைகளை எதிர்கொண்டு வெற்றிகொள்ள வேண்டும்"

## டேமியன் அடிகளார் உரை

(யாழ்ப்பாணம்)

"வாழ்வில் ஏற்படும் நிகழ்வுகளை ஒருவர் எந்த மனநிலையில எப்படி ஏற்றுக்கொள்கின்றார் என்பதில்தான் மன மகிழ்ச்சி தங்கியுள்ளது. ஏமாற்றங்கள், பிரச்னைகள், முறிவுகள் ஏற்படும்பொழுது அவற்றிலிருந்து தப்பியோட முற்படாது அவற்றை வெற்றிகொள்வதே வாழ்க்கையில் புதுத் தெம்பைக் கொடுக்கும்."

இவ்வாறு யாழ். பல்கலைக் கழக மருத்துவபீட மனமருத்துவத்துறை விரிவுரையாளரும், 'நான்' சஞ்சிகை துணை ஆசிரியருமான அதிவணக்கத்துக்குரிய எஸ். டேமியன் அடிகளார். யாழ். றோட்டறிக் கழகத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற 'சமுதாய மாற்றத்திற்கு மனித வளத்தின் ஆற்றல்' என்ற தலைப்பிலான கருத்தரங்கில் தெரிவித்தார்.

இக்கருத்தரங்கு யாழ்ப்பாணம் ஞானம்ஸ் உல்லாச விடுதியில யாழ்ப்பாண றோட்டறிக் கழகத்தின் தலைவர் வி. ரி. சிவலிங்கம் தலைமையில் நடைபெற்றது.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், "எவருக்கும் எதிர்காலத்தில் நம்பிக்கை, வளைந்துகொடுக்கும் இயல்பு, விரைவாகத் தீர்மானத்துக்கு வரும் எண்ணம், புன்னகை செய்யும் முகம் என்பனவே நிறைவான வாழ்க்கைக்கு வழிமுறையாகும். பொருத்தமான வார்த்தைகளைத் தேர்ந்தெடுத்துப் பேசுதல், வெற்றியில் வெறிகொள்ளாமலும் தோல்வியில் சோர்ந்துவிடாமலும் திறமைகளை விருத்தி செய்தல், பிறரது திறமைகளைப் பாராட்டிப் பெருமனத்தோடு வாழுதல் போன்றவை பெரும் மகிழ்ச்சிக்கு இட்டுச் செலலும் விருதுகளாகும். உனக்கு மட்டும் வாழ விரும்பினால் நீ மகிழ்ச்சியாக இருக்க முடியாது. எடுத்த முயற்சியை ஊக்கத்துடனும், மகிழ்ச்சியுடனும், நம்பிக்கையுடனும் செய்து முடிப்பதே மனித வரலாற்றில் வெற்றி கண்ட சாதனையாளர்களின் சரித்திரமாகும்" என்றார். (எஸ்)

## மாணவர் உணவு முத்திரை பொருள் விநியோகம் நீடிப்பு

[யாழ்ப்பாணம்]

யாழ். உதவி அரசஅதிபர் பிரிவின் கீழ் இயங்கும் பாடசாலை மாணவர்களின் 91-ம் ஆண்டு ஐப்பசி, 92-ம் ஆண்டு பங்குனி மாதங்களுக்கான உணவுமுத்திரைக்குப்பொருள்கள் வழங்கும் திகதி நீடிக்கப்பட்டுள்ளது.

மேற்படி உணவு முத்திரைகளுக்கு அடுத்த மாதம் 5-ம் திகதி வரை உணவுப் பொருள்களை வழங்கும்படி யாழ். ப. நோ. கூ. சங்கத்துக்கு யாழ். உதவி அரச அதிபர் அறிவித்துள்ளார். [வி]

## பழுதடைந்த அரிசி

(அரியாலை)

கடந்த 22ந் திகதியிலிருந்து ஊர்காவற்றுறை ப. நோ. கூ. சங்க கிளை 1ல் இடம்பெயர்ந்தவர்களுக்கான விநியோகத்தில் வழங்கப்பட்ட பச்சை அரிசி பாவனைக்குதவாத நிலையில் இருந்ததாக புகார் செய்யப்பட்டுள்ளது. (59)

# 'லங்கா தீப' நிருபரிடம் சிறிமா மன்னிப்புகோரினார்

(கொழும்பு)

'லங்கா தீப' நிருபரிடம் எதிர்க்கட்சித் தலைவி திருமதி சிறிமா பண்டாரநாயக்கா மன்னிப்புக் கோரியுள்ளார்.

அத்தனகலத் தொகுதி சிறிலங்காசுதந்திரக்கட்சி கிளை ஏற்பாடு செய்திருந்த நித்தம்புவக் கூட்டத்தில் தாக்கப்பட்ட 'லங்கா தீப' பத்திரிகை நிருபர் சூலவன்ச சிறிலாவிடம் நேற்று முன்தினம் அறிக்கை ஒன்றின் மூலம் அவர் மன்னிப்புக் கோரினார்.

## சிறப்புப் பட்டத்துடன் பொன்னுடை போர்த்தி பொற்கிழி வழங்கி கௌரவம்

(யாழ்ப்பாணம்)

காரைநகர் கம்பன் கழக அமைப்பாளரும் யாழ். இந்துக் கல்லூரி ஆசிரியருமாகிய திரு. த சிவகுமாரன் அவர்கள் 'தமிழருவி' எனும் சிறப்புப் பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளார்.

யாழ் ஈச்சமோட்டை கலட்டிப்புலம் ஸ்ரீ ஞான வைரவர் ஆலயத்தில் திருவிழாக் காலத்தில் பெரிய புராண தொடர் விரிவுரை நிகழ்த்தியமைக்காக அவரது சமயப்பணியை பாராட்டி மேற்படி பட்டம் வழங்கப்பட்டதுடன் பொன்னுடை போர்த்தியும் பொற்கிழி வழங்கியும் கௌரவிக்கப்பட்டார்

இவ்விழாவில் திருவாளர்கள் தவசீலன் கலாநிதி காரை செ. சுந்தரம்பிள்ளை, எஸ். யுகபாலசிங்கம், இ. ஜெயராஜ் ஆகியோர் பாராட்டுரை வழங்கினர். (சி)

## இராசி பலன்

01-08-1992
சனிக்கிழமை
(தமிழுக்கு ஆடி 17)

திருதியை: மாலை6-36வரை, பூரம்: பின்னிரவு 3-24 வரை, இராகுகாலம்: காலை 9-03 முதல் 10-33 வரை, சுபநேரம்: மாலை 3-03 முதல 4-33வரை, ஆடிப் பூரம். சித்தயோகம்.

மேடம்: ஸ்தான மாற்றம், உடல் நலம் பாதிப்பு, குடும்பக் கவலை.

இடபம்: குடும்ப உறவில் விரிசல், காரியத் தடை. அலைச்சல்.

மிதுனம்: மன மகிழ்ச்சி, பரோபகார சிந்தனை, பண வரவு.

கடகம்: தொழில் வன்மம், பிதா தொல்லை, ஏமாற்றம்.

சிங்கம்: நினைத்தது கைகூடும், இனசன உதவி, காரிய சித்தி.

கன்னி: உற்சாகம் இன்மை, பகைவர் துன்பம், யோசனை.

துலாம்: மேலதிகாரிகள் ஆதரவு, தொழில்லாபம், விருந்து.

விருச்சிகம்: பதவிப் போட்டி, வாக்கவன்மை புத்திரர்சிறப்பு

தனுசு: கைப்பொருள் இழப்பு, நன்மதிப்பு, நண்பர் சகாயம்.

மகரம்: பொருள் வசதி, நல்ல மதிப்பு, நண்பர் சகாயம்.

கும்பம்: தொழில் லாபம், அந்நியர் உதவி, தானதர்மம்

மீனம்: மனைச்சிறப்பு பயண நன்மை, தொழில் வெற்றி.

— ஜோஸ்யர்

## ஓய்வூதியம்

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு பலநோக்கு கூட்டுறவுச்சங்கத்தின் கிராமிய வங்கியில் ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு ஓய்வூதியம் பணமாக வழங்கப்பட்டுள்ளது. (72)

## இன்று பரிசளிப்பு வைபவம்

(யாழ்ப்பாணம்)

அறவழிப் போராட்டக் குழுவினால், அறவழி நல்லொழுக்க சிறுவர் கழகத்தினருக்காக நடாத்தப்பட்ட அறிவுத்திறன் போட்டிகளில் வெற்றி பெற்ற சிறுவர்களுக்கான பரிசில்கள், சான்றிதழ்கள் வழங்கும் வைபவம் இன்று சனிக்கிழமை காலை 10-00 மணிக்கு, கைதடி, நுணுவில் அ. த. க. பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சிறுவர் பாதுகாப்பு நிதியம்- ஐ. நா. மாவட்ட இணைப்பாளர் செல்வி எம். றெபேக்கா பிரதம விருந்தினராக இவ் வைபவத்தில் பங்குபற்றவுள்ளார்.

## பார்சிலோனு ஒலிம்பிக் நாடுகள் பெற்ற பதக்கங்கள்

| நாடு | தங்கம் | வெள்ளி | வெண்கலம் |
|---|---|---|---|
| இணைந்த சோவியத் | 19 | 8 | 10 |
| ஐக்கிய அமெரிக்கா | 11 | 12 | 10 |
| சீனு | 7 | 10 | 4 |
| ஹங்கேரி | 6 | 4 | 1 |
| தென்கொரியா | 5 | — | 2 |
| ஜெர்மனி | 4 | 5 | 9 |
| போலந்து | 3 | 3 | 1 |
| கியூபா | 2 | 2 | 2 |
| ஸ்பெயின் | 2 | 1 | 1 |
| பல்கேரியா | 1 | 4 | — |
| யப்பான் | 2 | 2 | 4 |
| அவுஸ்திரேலியா | 1 | 3 | 3 |
| பிரிட்டன் | 1 | 1 | 2 |
| நோர்வே | 1 | 1 | — |
| துருக்கி | 2 | 2 | — |
| பிரான்ஸ் | — | 3 | 6 |
| இத்தாலி | — | 3 | 4 |
| சுவீடன் | — | 1 | 1 |
| ருமேனியா | — | — | 2 |
| பெரு | — | 1 | — |
| யூகோஸ்லாவியா, | — | — | 2 |
| நெதர்லாந்து | — | — | 3 |

பெல்ஜியம், பின்லாந்து, மங்கோலியா, சூரினும்' நியூஸிலாந்து, கனடா, தலா ஒரு வெண்கலம்.

## 148 வருடங்கள் பழமைவாய்ந்த வெலிக்கடைச் சிறைச்சாலை விரைவில் அகற்றபடவுள்ளது

[கொழும்பு]

148 வருடங்கள் பழமை வாய்ந்த வெலிக்கடைச் சிறைச்சாலை விரைவில் அகற்றப்படவுள்ளது.

வெலிக்கடைச் சிறைச்சாலை ஹோமாகம, இரத்தினபுரி ஆகிய இடங்களுக்கு கொண்டு செல்ல முடிவு செய்யப்பட்டுள்ளது.

இந்தச் சிறைச்சாலையில் 10,000 கைதிகள் உள்ளனர்.

வெலிக்கடைச் சிறைச்சாலை அமைந்துள்ள பிரதேசத்தின் விஸ்தீரணம் 50 ஏக்கர் ஆகும் இதன் மொத்தப் பெறுமதி 200 கோடி ரூபாவாகும்.

இந்தச் சிறைச்சாலை இரு கட்டங்களில் அகற்றப்படும் 3-ம் கட்டத்தில் ஒரு சிறு சிறைச்சாலை மட்டும் அங்கு அமைக்கப்படும். [ரி]

## தம்புள்ளை ஹோட்டல்திட்டம் தொடர நீதிமன்று அனுமதி

[கொழும்பு]

தம்புள்ள கந்தலம ஹோட்டல் சட்டிட வேலைகளை நிறுத்தக்கோரும் மனுவை மேல் முறையீட்டுநீதிமன்றம்நேற்று முன்தினம் நிராகரித்துள்ளது.

கந்தலம ஹோட்டலின் உரிமையாளர்கள் ஹோட்டல் நிர்மாண வேலைகளை தொடரலாமென்று மேல்முறையீட்டு நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

## அறிவுறுத்தல் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வளர்ந்தோர் கல்வித் திட்டத்தின் கீழ், தொழில் திறன் பயிற்சி நெறி நடைபெறும் பாடசாலை அதிபர்களுக்கான அறிவுறுத்தல் கூட்டம் நாளை 2ம் திகதி ஞாயிறு காலை 9-00 மணிக்கு யாழ் கல்வித்திணைக்களக் கருத்தரங்கு மண்டத்தில் நடைபெறவுள்ளது. அவ்வப் பாடசாலை அதிபர்கள் தவறாது இதில் சமூகம் தரும்படி கேட்கப்படுகின்றனர் (சு)

## கொழும்பு நகரில் விரக்தியடைந்த நிலையில் வடபகுதி இளைஞர்கள் தவிப்பு

(கொழும்பு)

வெளிநாடுகள் செல்வதற்காக வெளிநாட்டு முகவர்களிடம் பணம் கட்டி ஏமாற்றமடைந்த நிலையில் ஆயிரக்கணக்கான வடபகுதி இளைஞர்கள் கொழும்பில் பெரும் சிரமப்பட்டுவருதாக அங்கிருந்துவரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

வருடக் கணக்காக இந்த இளைஞர்கள் லொட்ஜ்களிலும், தனியார் வீடுகளிலும் விரக்தியடைந்த நிலையில் வாழ்ந்து வருகிறார்கள்.

இந்த இளைஞர்கள் பாங்கொக், மாஸ்கோ, சிங்கப்பூர் ஆகிய இடங்கள்வரை சென்று பின்னர்திருப்பியனுப்பப்பட்ட நிலையில் கொழும்பு வந்து சேர்ந்தனர்.

இலட்சக்கணக்கான ரூபாய்களை இந்த இளைஞர்களிடம் கூலியாகப் பெற்றுக்கொண்ட ஏஜென்ஸிகள், இவர்களை வெளிநாட்டுக்கு அனுப்புவதில் அக்கறையாகச் செயற்படுவதில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

வெளிநாட்டு மோகத்தால் கொழும்பில் தங்கி நிற்கும் வடபகுதி இளைஞர்கள் பலர் உணவு மற்றும் உடைகளின்றியும் பெரும் சிரமத்தை எதிர்நோக்கியுள்ளனர். (ரி)

## கலைவிழா

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறையின் யாழ். மாவட்டச் செயலகத்தினர் நடத்தும் மாதாந்தக் கலைவிழா இன்று சனிக்கிழமை இரவு 7-30 மணிக்கு கோண்டாவில் யாழ். மாவட்டச் செயலகத்தின் திலீபன் அரங்கில் நடைபெறவுள்ளது

அரசியல் துறை, யாழ். மாவட்டச் செயலகத் தொழிற் சங்கப் பிரிவுப் பொறுப்பாளர் திரு. இளையவன் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் கலை பண்பாட்டுக் கழகத் துணைப் பொறுப்பாளர் திரு. தேவர், விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பின் யாழ். மாவட்டத் துணைப் பொறுப்பாளர் செல்வி சுகுணு, தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் பிரமுகர் திரு. பாலகுமார் ஆகியோர் சிறப்புரை ஆற்றுவார்கள்.

விசேட கலைநிகழ்ச்சியாக கலை பண்பாட்டுக் கழகத்தின் ஆதரவில் உருவான திருமலை மாவட்ட இடம்பெயர்ந்த கலைஞர்கள் வழங்கும் 'காணி நிலம் வேண்டும்'' என்னும் நாடகம் முதலாவது தடவையாக மேடையேறவுள்ளது.

## சிவபாதசுந்தரனர் குருபூசை

(யாழ்ப்பாணம்)

சைவப் பெரியார் சிவபாதசுந்தரனர் குருபூசை வழமை போல் ஆகஸ்ட் 3ம் திகதி, சகல சைவப் பாடசாலைகளிலும், ஆலயங்களிலும் விசேட பூசையும், அஞ்சலிக் கூட்டமும் நடைபெறவுள்ளன.

சுழிபுரம் விக்டோறியாக்கல்லூரியிலும், தெல்லிப்பழை துர்க்கையம்மன்ஆலயத்திலும் இந்நிகழ்ச்சிகளுக்கான விசேட ஒழுங்குகளைப் பெரியாரின் நினைவுச்சபை மேற்கொண்டுள்ளது.

## ஜனாதிபதி பாக். விஜயம்

(கொழும்பு)

ஜனாதிபதி பிரேமதாசா செப்டம்பர் 23-ல் பாகிஸ்தானுக்கு விஜயமொன்றை மேற்கொள்ளவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது

பாகிஸ்தானிலிருந்து அவர் ஏற்கனவே திட்டமிட்டபடி ஏனைய சார்க் நாடுகளுக்கும் விஜயம் செய்யவுள்ளார், [ரி]

## பாதுகாப்பு வரி

(யாழ்ப்பாணம்)

இலங்கை வங்கியிடம் கடன் பெற்றவர்களிடம் 3 சத வீதப் பாதுகாப்பு வரியும், 3 சத வீத மொத்தத் திரட்டு வரியும் மாதாந்தம் அறவிடுமாறு திறைசேரி சகல வங்கிகளையும் பணித்துள்ளது.

இந்த நடைமுறை கடந்த மே மாதம் 1ந் திகதி முதல் அமுலுக்கு வந்துள்ளது. (மா)

தந்திரிமலை

1-ம் பக்கத் தொடர்ச்சி)

திரேட் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டபோது பௌத்த பிக்குவை இம்மாதம் 8ம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கும்படியும், மேற்கண்ட இருவரையும்பிணையில் செல்லுமாறும்மாஜிஸ்திரேட் உத்தரவிட்டார். (வி)

## பாப்பரசர் ஓய்வு

(ரோம்)

பரிசுத்த பாப்பரசர் 2-வது அருளப்பர் சின்னப்பர் மறு அறிவித்தல் வரை பொது வைபவங்களில் கலந்து கொள்ளமாட்டார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் சத்திர சிகிச்சைக்கு உள்ளான பாப்பரசர் ஓய்வு எடுக்கவேண்டிய காரணத்தினுல் பொதுவைபவங்களில அவர் கலந்துகொள்ள மாட்டாரென தெரிவிக்கப்படுகிறது. (ரி)

முஸ்லீம்

(1-ம பக்கத் தொடர்ச்சி)

கள் மேலும் தெரிவித்தனர்.

முஸ்லிம்களுக்கு தனி இராணுவப் படை அமைக்கப்பட வேண்டும் என்று முஸ்லிம்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்ட ஆலோசனையைத் தொடர்ந்து ஆராய்ந்த பின்னரே மேற்கண்ட பதில் வழங்கப்பட்டுள்ளது.

முஸ்லிம்களின் இந்த ஆலோசனை குறித்து பாதுகாப்பு அதிகாரிகள் பட்டத்தில் அண்மையில் விரிவாக ஆராயப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. (ரி)

## விமானத்தை காணவில்லை

[பாங்கொக்]

பாங்கொக்கிலிருந்து காட்மண்டு நோக்கிச் சென்று கொண்டிருந்த தாய்லாந்து நாட்டு விமானம் ஒன்று நேற்றுக் காணமல் போய்விட்டதாக கூறப்படுகிறது.

காட்மண்டுவிலிருந்து 14 கிலோ மீற்றர் தொலைவில் குறிப்பிட்ட விமானம் விமானக்கட்டுப்பாட்டு நிலையத்துடனுன தொடர்பை இழந்துவிட்டதாகவும் கூறப்படுகிறது. (க)

அரசியலுக்கு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யின் தலைவியும் எதிர்க்கட்சித் தலைவியுமான திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா இவ்வாறு தெரிவித்தார்.

சிங்களப் பத்திரிகை ஒன்றுக்கு அளித்த பேட்டியில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு-கிழக்கில் நடைபெறும் யுத்தத்தினுல் நாட்டின் சகல பகுதிகளிலும் உள்ள மக்கள் மிகவும் கஷ்டம் அடைகின்றனர்.

இதற்கு முடிவு காணவேண்டுமெனில் அரசியல் தீர்வு காணப்படல்வேண்டும்

இனப் பிரச்னைக்குத் தீர்வு காண்பதற்கு நேர்மையான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும். நாட்டின் அரசியலிலும் மாற்றங்கள் தேவை என்ருர்.

## கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

இன்று நடைபெறும் கல்விப் பொதுத் தராதர [உயர் தர] பரீட்சை சுமுகமான முறையில் நடப்பதற்கு ஆசிரியர்கள், மாணவர்கள் கல்வியில் ஆர்வம் கொண்ட சகல தரப்பினரும் ஒத்துழைப்பு தருமாறு யாழ் கல்விப் பணிப்பாளர் இ சுந்தரலிங்கம் கேட்டுள்ளார்.

பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபங்களுக்கு நேரகாலத்தோடு வருகை தருமாறும் அவசியமான ஆவணங்களையும் எடுத்து வருமாறு மேலும் அவர் கேட்டுள்ளார். [சு]

## இன்று

(யாழ்ப்பாணம்)

நீர்வேலி தெற்கு சங்கர பண்டிதர் விளையாட்டு மைதானத் திறப்பு விழா, இன்று சனிக்கிழமை மாலை 4-00 மணிக்கு கழகத் தலைவர் க. மகாலிங்கம் தலைமையில் நடைபெறும்.

மேற்படி கழகச் செயலாளர் க. தர்மலிங்கம் விளையாட்டு மைதானத் திறப்பு விழாவை ஆரம்பித்து வைப்பார். (க)

ருகமையில்

[1ம் பக்கத் தொடர்ச்சி]

ன யாக விடுவிக்க ஏற்பாடுகளைச் செய்யுமாறு, ஜனதிபதிக்கும், உயர் கல்வி அமைச்சர் ஜனப் ஏ சி. ஹமீத்துக்கும் கடித மூலம் வட இலங்கை மருத்துவக் கல்லூரிப் பணிப்பாளர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

சம்பந்தப்பட்ட மாணவர்களின் விடுவிப்புக்கு உதவி புரியுமாறு சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கம் அரசாங்க அதிபர் ஆகியோருக்கும் பணிப்பாளர் சபைக்கும் வேண்டுகோள் விடுத்துள்ளார்

## பரீட்சை

(யாழ்ப்பாணம்)

நில அளவை நாயகத்தால் உத்தரவு பெற்ற படம் வரைவோர் சான்றிதழ் வழங்குவதற்காக நடாத்தப்படும் பரீட்சை 1992 செப்டம்பர் மாதம் 6-ம் திகதி கொழும்பில் நடைபெறவிருக்கிறது.

மேற்படி பரீட்சை இரு பகுதிகளாக நடைபெறவிருக்கிறது, முதற்பகுதிப் பரீட்சையான ஆள் கூற்றுதல் பரீட்சையில் சித்தியடைந்தவர்களே இரண்டாவது பரீட்சைக்கு நவம்பர் 7-ம், 8-ம் திகதிகளில் தோற்றமுடியும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. [மா]

பத்து வருட

(1ம பக்கத் தொடர்ச்சி)

சேர்ப்பதற்கு கூட்டுப்படைத் தலைமையகம் பகீரதப்பிரயத்தனம் செய்துவருவதாகவும் கூறப்படுகிறது. இது படையினரின் பலவீனத்தையே எடுக்க்க் காட்டுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

க. பொ. த.

[1-ம் பக்கத் தொடர்ச்சி)

மட்டும் 8 ஆயிரத்துத்துக்கும் மேட்பட்டோர் தோற்றுகிறார்கள்.

இலங்கையிலுள்ள தடுப்பு முகாம்கங்களிலும் இம்முறை மேற்படி பரீட்சை நடாதத்தப்படுகின்றது. இம்முகாம்களிலிருந்து 200 பேர் இப்பரீட்சையில் தோற்றுகிறார்கள். [வி]

புலிகளின்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

கூறப்படுகிறது.

கிழக்கு மாகாணத்தில் ஸ்ரீலங்கா இராணுவத்தினுல் புதிதாக அமைக்கப்பட்டிருந்த காவலரண்கள் அனைத்தையும் கைவிட்டு இராணுவம் பாதுகாப்பான இடங்களில் இருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

அண்மையில் கிழக்கு மாகாணத்தில் இராணுவ முகாம்களையும், காவலரணகளையும் பலப்படுத்திய இராணுவத்தினர் கடந்த வாரம் இப் பகுதிகளில் விடுதலைப் புலிகள் நடாத்திய இரு வெவ்வேறு தாக்குதல்களினுல் பல காவலரண்கள் அழிக்கப்பட்டதுடன், பலத்த உயிர்சேதத்தையும் விடுதலைப் புலிகள் ஏற்படுத்தினுர்கள்.

இதுபோன்ற திடீர் தாக்குதல்கள் புலிகளால் வருங்காலத்தில் நடாத்தப்படக் கூடும் என்ற அச்சத்தினுலேயே இராணுவத்தினர் புதிதாக அமைத்திருந்த காவலரண்களை கைவிட்டுள்ளதாகவும் கூறப்படுகின்றது. (வி)

யாழ். செஞ்சிலுவைச்

(1-ம் பக்கத் தொடர்ச்சி]

கிருர்.

யாழ். கிளை தலைமையகத்தின் புதிய செயற்குழு உறுப்பினர்கள் தெரிவு இடம்பெறும் வரை மேற்படி ஐவர் கொண்டகுழு நிர்வாகத்தை கவனிக்குமென்று கூறப்படுகிறது. (மா)

போரில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ளது.

இதுவரை காலமும் யுத்தம் நடைபெற்றுக்கொண்டிருக்கும் வடக்குகிழக்கு பகுதிகளில் கடமையிலிருக்கும் காலத்தில் மட்டுமே பொலிசாருக்கு இந்தப் போர்க்கால விசேட படி வழங்கப்பட்டுவந்தது குறிப்பிடத்தக்கது. (ரி)

ஐ. நா. இந்த

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பட்டுவிடும்'' என்று செயலாளர் நாயகம் டாக்டர் பூத்ரஸ் காலி எச்சரிக்கை செய்துள்ளார்.

ஐ. நா. சபை தற்போது 240 கோடி ரூபா கடனில் இயங்குவதாகவும், ஐ. நா. சபைக்கு அமெரிக்கா 2 ஆயிரத்து 500 கோடி ரூபாவையும். ரஷ்யா ஆயிரத்து 200 கோடி ரூபாவையும் கடனுக செலுத்தவேண்டி இருப்பதாகவும் ஐ. செயலர் மேலும் தெரிவித்துள்ளார். [வி]

இந்தியாவிலுள்ள

(1-ம் பக்கத் தொடர்ச்சி]

தடை நீக்கப்படவேண்டும். இந்தியாவில் கல்வி கற்கும் இலங்கைத் தமிழ் மாணவர்கள் தொடர்ந்து கல்வி கற்பதற்கு வகை செய்யப்படவேண்டும்.

சுமார் 2,000 பேர் இந்த ஊர்வலத்தில் கலந்து கொண்டனர்.

விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரனின் உருவம் பொறித்த சின்னங்களையும் ஊர்வலத்தினர் அணிந்திருந்தனர். [க]

நல்லூர்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

போக்குவரத்து மூடப்பட்டிருக்கும்

பொதுமக்கள் வீதி ஒழுங்குகளை அனுசரித்து நடப்பதுடன் சிறுவர்களை பெற்றோர் அழைத்து வருவதையும் கூடுதலாக தவிர்த்துக்கொள்ளும்படியும் கேட்டுள்ளனர்.

ஆலய உற்சவம் தொடங்கி முடிவடையும் வரை பருத்தித்துறை வீதியில் உள்ள பகுதியில் தமிழீழ காவல்துறை விசேட பணிமனையொன்று இரவு பகலாக இயங்கும். (வி)

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் இவன்கோவில் மேற்கு வீதி 65ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1992-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 1ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post office [Sri Lanka under Licence Number B/10336/8